# 11. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

### 1. முன்னுரை

உழவர் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், வேளாண்மையில் நீடித்த, நிலைத்த மேம்பாடு ஏற்படவும், அறுவடைக்குப் பின்செய் மேலாண்மையுடன் கூடிய வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக செயல்பாடுகள் மிக முக்கிய பங்களிக்கின்றன. இன்றைய காலகட்டத்தில், வேளாண்மையில் அதிகரித்து வரும் உணவுத் தேவைக்கேற்ப பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு செயலாற்றிட வேண்டியுள்ளது. வேளாண் விளைபொருட்களின் தேவை தொடர்ந்து அதிகரித்து வருகின்றபோதிலும், உற்பத்தியானது விளைச்சலில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை பொருத்து அமைகிறது. இது விவசாயியின் வருமானத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உற்பத்தி இழப்பு பெரும்பாலும் விளைபொருட்கள் விரைவில் தரம் குறையும் தன்மை மற்றும் முறையற்ற அறுவடைக்கு பின்செய் கையாளும் முறைகளால் ஏற்படுகிறது. தற்போது விவசாயிகளுக்கு திறமையான அறுவடைக்கு பின்செய் மேலாண்மை முறைகளும், வலுவான சந்தை உட்கட்டமைப்பு வசதிகளும் மிகவும் இன்றியமையாததாகும். தொழிற்சாலை தயாரிப்புகளை விற்பனை செய்வது போல் அல்லாமல், வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துவது முறையாக இல்லை. எனவே, சந்தைப்படுத்துதலில் உள்ள இந்த அடிப்படை வேறுபாட்டினால், வேளாண் விளைபொருட்களுக்கு சிறப்பு விற்பனை முறைகளை உருவாக்குதல், வணிக நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் இன்றியமையாததாகும்.

விளைபொருட்களை நியாயமான விலையில் சந்தைப்படுத்திடவும், உரிய ஆதாய விலையினைப் பெற உறுதிப்படுத்தும் நோக்குடனும் 1977ஆம் ஆண்டு முதல் தனித்துறையாக செயல்பட்டு வந்த வேளாண் விற்பனைத்துறை,



வேளாண் விற்பனையை முறைப்படுத்துவதுடன், வேளாண் விளைபொருளை மதிப்புக் கூட்டுதல், பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகிய அறுவடை பின்செய் மேலாண்மை தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், மேம்படுத்தவும் "வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை"–ஆக 2001 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தில், இத்துறையில் நேரடி வணிக வசதிகளை உருவாக்குதல், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலம் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை மேம்படுத்துதல், அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைக்க உலர்களங்கள் மற்றும் குளிர்பதன கிட்டங்கிகள் அமைத்தல், நேரடி விற்பனை மூலம் விவசாயிகளிடமிருந்து வேளாண் விளைபொருட்களை வணிகர்கள் கொள்முதல் செய்திட விவசாயிகளிடையே விளை பொருள்குழு அமைத்தல், வேளாண் ஏற்றுமதிக்கு உறுதுணையாக வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைத்தல், நுகர்வோருக்கு தரமான உணவுப் பொருட்களை அக்மார்க் தரம் பிரிப்பின் மூலம் கிடைக்கச் செய்தல் என பல்வேறு இனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைக்க விவசாயிகள் பங்களிப்புடன் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைத்தல், குளிர்ப்பதன கிடங்கு வசதிகள் மற்றும் நவீன கிட்டங்கிகள் அமைத்தல், சந்தை தகவல் மற்றும் சந்தை நுண்ணறிவினை அளிப்பதன் மூலம் விவசாயிகள் சந்தை தேவைக்கேற்ற பயிர்களை தேர்ந்தெடுத்து பயிரிட்டு சந்தை சார்ந்த வேளாண்மை மூலம் தங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், கீழ்க்கண்ட இனங்களில் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

- பயிர்வாரியாக விளைபொருள் குழுக்கள் அமைத்தல்.
- அறுவடைக்குப்பின் வேளாண் விளைபொருட்களில் ஏற்படும் இழப்பினை குறைக்க விவசாயிகளின் பங்களிப்புடன் கூடிய வேளாண் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க ஊக்குவித்தல்.
- விஞ்ஞான முறைப்படி சேமித்தல், மதிப்புக் கூட்டுதல், பதப்படுத்துதல், தானியங்களை பாதுகாத்தல் பற்றிய தொழில்நுட்ப பயிற்சிகளை அதிக அளவில் விவசாயிகளுக்கு அளித்தல்.
- வேளாண் விளைபொருள் குழுக்களுடன் வணிகர்கள்/ வியாபாரிகளை நேரடி இணைப்பு ஏற்படுத்தி சந்தைப்படுத்துதல்.
- தேவையான நவீன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் வேளாண் விளைபொருட்களை நீண்டநாள் கெடாமல் வைத்திருந்து சந்தைப்படுத்துதல்.
- விற்பனை முனையங்கள், வேளாண் விளைபொருள் பேரங்காடி, சிறப்பு வணிக வளாகங்கள் ஆகிய மாற்று விற்பனை முறைகள் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்தல்.
- அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் மதிப்புக் கூட்டுதல் மற்றும் உணவு பதப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தனியார் நிறுவனங்களை ஊக்குவித்தல்.
- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மற்றும் உழவர் சந்தைகளில் நிலவும் வேளாண் விளைபொருட்களின் தினசரி சந்தை விலை நிலவரங்கள் மற்றும் வரத்து விவரங்களை ஊடகங்கள், குறுஞ்செய்தி மற்றும் இணையதளம் வழியாக விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு அறியச் செய்தல்.



- வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் மூலம் சந்தையறிவுத்திறன், விலை முன்னறிவிப்பு, பயிர் தொடர்பான ஆலோசனைகள், சந்தை சார்ந்த விரிவாக்கம் ஆகியவற்றை குறித்த தொழில்நுட்ப பயிற்சிகள் மூலம் விவசாயிகளின் திறன் மேம்பாட்டிற்கும், அறிவுத் திறனை பகிர்ந்துகொள்ளவும் வழிவகுத்தல்.
- வேளாண் வணிக மையம் மற்றும் ஊரக வணிக மையங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சந்தை நுண்ணறிவு சேவைகளை பயன்படுத்தி, சந்தை சார்ந்த உற்பத்தி அணுகுமுறை மேற்கொள்ளுதல்.

## 2. வேளாண் விற்பனை செயல்பாடுகள்

### 2.1.விற்பனைக்குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி, வேளாண் விளைபொருட்களின் விற்பனையை முறைப்படுத்தி, ஒருசேர வேளாண் விற்பனையை மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டம் 1987 மற்றும் விதிகள் 1991ன்படி 21 விற்பனைக்குழுக்களின் கட்டுப்பாட்டில் 277 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்காக விவசாயிகளிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. கொள்முதல் செய்யும் விளை பொருட்களின் மதிப்பில் ஒரு விழுக்காடு மட்டும் வியாபாரிகளிடமிருந்து சந்தைக்கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இது தவிர வியாபாரிகள் மற்றும்

எடையாளர்களிடமிருந்து உரிமக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

**2.1.1 . ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள வசதிகள்**

- கிட்டங்கி வசதி, பரிவர்த்தனைக்கூடம்
- விவசாயிகளுக்கு ஓய்வறை
- வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இடவசதி
- ஊரக வணிக மையம், இடுபொருள் கடை
- தானியங்கி எடையிட்டு மூட்டை தைக்கும் கருவி
- எடை மேடை, எடைத்தராசு
- அன்றாட சந்தை விலை நிலவரம் குறித்த அறிவிப்பு, விவசாயிகளுக்கு இலவச மருத்துவ வசதி மற்றும் பல.

2011–2012ஆம் ஆண்டில் 18.96 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்கள் விவசாயிகளால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாயிலாக விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் சந்தைக் கட்டணமாக ரூ.7705.84 இலட்சம் வியாபாரிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது.

**2.2. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் நவீன கிட்டங்கிகள்**

வேளாண் விளைபொருட்களை வெப்பம், தூசி, காற்று, ஈரப்பதம் மற்றும் எலித்தொல்லை போன்றவற்றிலிருந்து பாதுகாத்து விஞ்ஞான முறைப்படி சேமிப்பதற்கு நவீன வசதிகள் கொண்ட கிட்டங்கிகள் இன்றியமையாததாகும். சேமிப்புக் கிட்டங்கிகளில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இருப்பு வைத்து, பொருளீட்டுக் கடன் பெறலாம்.

தற்சமயம் 15 மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ரூ.8200 இலட்சம் மதிப்பீட்டில் 95 விழுக்காடு நபார்டு வங்கியின் நிதி உதவியுடனும், 5 விழுக்காடு



விற்பனைக்குழு நிதியுடனும், 2000 மெட்ரிக் டன் (37 எண்கள்), 5000 மெட்ரிக் டன் (8 எண்கள்) மற்றும் 10000 மெட்ரிக் டன் (5 எண்கள்) கொள்ளளவு கொண்ட 50 நவீன கிட்டங்கிகள் அமைக்க கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 03.03.2012 அன்று 21 நவீன கிட்டங்கிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**2.3. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை மேம்படுத்துதல்**

வேளாண்மையில் பொருளாதார நிலைத்தன்மை மற்றும் நீடித்த நிலையான மேம்பாடு அடைவதற்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 20 ஊரக கிட்டங்கிகள் மற்றும் 150 உலர்களங்கள் ரூ.770 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட வசதிகள் அறுவடைக் காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியின் போது ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள கிட்டங்கிகளில் விளைபொருட்களை இருப்பு வைத்து பொருளீட்டுக்கடன் பெறவும், அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்கவும் விவசாயிகளுக்கு உதவுகிறது.

வேளாண் விளைபொருட்களை சரியாக எடையிடும் பொருட்டு, தானியங்கி எடையிட்டு மூட்டை தைக்கும் கருவி 4 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ரூ.33.75 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

மேலும், 4 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில், விவசாயிகள் சந்தை நிலவரம் அறிய தகவல் சேகரிக்கும் கையடக்க கருவி, மின்னணு காட்சிப் பலகை மற்றும் கணினிமயமாக்குதல் போன்ற வசதிகள் ரூ.163.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அதிக வரத்து பெறும்பொருட்டு 6 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில், வணிகர்களுக்காக 60 கடைகள் ரூ.480 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 03.03.2012 அன்று, கடலூர், வடக்கிபாளையம், விருதுநகர், ஆரணி மற்றும் பாவூர்சத்திரம் ஆகிய 5 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில், வணிகர்களுக்கான 50 கடைகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**2.4. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஊரக வணிக மையங்கள்**

ஊரக வணிக மையங்கள் ரூ.150 இலட்சம் செலவில் 10 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரக வணிக மையம் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கும், சந்தைகளுக்கும் நேரடி விற்பனைத் தொடர்பினை ஏற்படுத்துகிறது. இம்மையங்கள் விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை ஒன்று சேர்த்து வணிகர்கள் மற்றும் உணவு பதப்படுத்துவோர் நேரிடையாக கொள்முதல் செய்ய உதவுகிறது. மேலும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை மையமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஊரக வணிக மையங்களில் இடுபொருள் கடைகள், சேமிப்புக் கிடங்கு, சிப்பம் கட்டும் வசதி, விற்பனை வசதி, சந்தை நுண்ணறிவு மற்றும் தகவல் தெரிவிக்கும் வசதி, பண்ணை விரிவாக்கம் மற்றும் பயிற்சி போன்ற பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த 10 ஊரக வணிக மையங்கள் மூலம் இதுவரை 120 விளைபொருள் குழுக்களைச் சேர்ந்த 245 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**2.5. வாடகையில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்**

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 277 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 97 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருட்களுக்கு அதிக விலை கிடைக்கும் பொருட்டு விவசாயிகள் வருகை மற்றும் விளைபொருட்கள் வரத்தினை அதிகரிக்கவும், இதன் மூலம் விற்பனைக்குழுக்களின் வருவாய் அதிகரிக்கவும், வாடகைக்



கட்டிடத்தில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளுடன் சொந்தக் கட்டிடம் அமைத்தல் இன்றியமையாததாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 03.03.2012 அன்று, ஆத்தூர் மற்றும் பவானி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு சொந்தக் கட்டிடம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**2.6. பொருளீட்டுக் கடன்**

அறுவடைக் காலங்களில் விலை வீழ்ச்சியினால் ஏற்படும் நஷ்டத்தினை தவிர்க்க விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள கிட்டங்கிகளில் இருப்பு வைத்து பொருளீட்டுக் கடன் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் விளைபொருட்களின் மதிப்பில் 75 விழுக்காடும், இதர விவசாயிகள் விளைபொருட்களின் மதிப்பில் 50 விழுக்காடும் பொருளீட்டுக் கடன் பெற்று 6 மாதம் வரை இருப்பு வைக்கலாம்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டு வந்த பொருளீட்டுக் கடன் தொகை 2011–2012ஆம் ஆண்டு முதல் ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தி அதே 5 விழுக்காடு வட்டி வீதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் விவசாயிகள் தங்களது உடனடி பணத்தேவையை பூர்த்தி செய்துகொள்ளவும் அடுத்த சாகுபடிக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவும் பேருதவியாக உள்ளது. 2011–2012ஆம் ஆண்டில் 2246 விவசாயிகள் ரூ.1859.59 இலட்சம் பொருளீட்டுக் கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

வணிகர்கள், விளைபொருட்களின் மதிப்பில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூபாய் ஒரு இலட்சம் வரை பொருளீட்டுக் கடன் 9 விழுக்காடு வட்டி வீதத்தில் பெற்று 3 மாதம் வரை இருப்பு வைக்கலாம். 2011–2012ஆம் ஆண்டில் 122 வணிகர்கள் ரூ.125.82 இலட்சம் பொருளீட்டுக் கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

**2.7. ஒரே சீரான அறிவிக்கை செய்தல்**

அறிவிக்கை செய்யப்பட்ட விளைபொருட்களை விற்பனைக் குழுவின் எல்லைக்குட்பட்ட அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் விற்கும் போதும், வாங்கும் போதும் விற்பனைக்குழுக்களால் சந்தைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விற்பனைக் குழுக்களுக்கிடையே அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகள் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட விளைபொருட்கள் வெவ்வேறாக உள்ளன. தற்போது 40 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. ஆனால் 40 வேளாண் விளைபொருட்களும் எல்லா மாவட்டங்களிலும் ஒரே சீரான அறிவிக்கை செய்யப்படவில்லை. ஒரே சீரான அறிவிக்கை செய்தல் விற்பனைக்குழுவின் அறிவிக்கை செய்யப்பட்ட எல்லைப் பகுதிகளிலும் மற்றும் அறிவிக்கை செய்யப்படாத பகுதிகளிலும் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை மாறுபாட்டை நீக்குகிறது. மாநில முழுமைக்கும் ஒரே சீரான அறிவிக்கை செய்ய முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**2.8. சந்தை விலை விபரம் தெரிவித்தல்**

சந்தை விலை விபரம் மற்றும் சந்தை நுண்ணறிவு, வேளாண் விளைபொருட்கள் விற்பனையில் பெரும் பங்கு வகிக்கிறது. பல்வேறு சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை நிலவரத்தினை விவசாயிகள் அறிந்து கொள்வதன் மூலம் அதிக விலை கிடைக்கும் சந்தைக்கு தங்கள் விளைபொருட்களை எடுத்துச் சென்று நல்ல விலை பெற இயலும்.

மத்திய அரசின் சந்தை ஆராய்ச்சி மற்றும் தகவல் இணைப்பு (MRIN) திட்டத்தின் கீழ் 21 விற்பனைக்குழுக்களுக்கும், 184 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கும் 205 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக வேளாண் விளை பொருட்களின் தினசரி விலை மற்றும் வரத்து விவரங்கள் www.agmarknet.nic.in என்ற இணையதளத்தில் வழங்கப்படுகின்றன.



2011–2012ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 20 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை கணினிமயமாக்க ரூ.250 இலட்சம் மதிப்பீட்டில் கையடக்கக் கருவிகள், கணினிகள், மின்னணு ஏலம், விற்பனை மற்றும் நிர்வாக முறைகளுக்கான மென்பொருள் ஆகியவை நிறுவப்பட உள்ளது. இத்தகைய வசதிகள் ஒளிவு மறைவற்ற வர்த்தகத்திற்கு உறுதுணை புரியும்.

மேலும், விவசாயிகளுக்கு நேரடி விற்பனைக்கு உதவும் வகையில் தற்போது உள்ள உழவர்சந்தைகளில் காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை நிலவரங்களை விவசாயிகளுக்கு அளிக்கும் பொருட்டு கணினி மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது 179 உழவர்சந்தைகளின் தினசரி காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை விவரங்கள் www.tnsamb.gov.in என்ற இணையதளத்தில் அளிக்கப்படுகின்றன.

**2.9. கிராமங்களில் உலர்களங்கள் அமைத்தல்**

தானியம் மற்றும் பருப்பு வகைகளில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பு மொத்த உற்பத்தியில் 5 முதல் 10 விழுக்காடாக உள்ளது. இவ்விழப்பைக் குறைக்கும் பொருட்டு விளைபொருட்கள் சரியான ஈரப்பதத்தில் சேமிக்கப்பட வேண்டும். இதற்காக கிராமங்களில் விவசாயிகள் பயன்பெறுவதற்கு 1997ஆம் ஆண்டு முதல் உலர்களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், இதுவரை ரூ.2625 இலட்சம் செலவில் பல்வேறு கிராமங்களில் 1311 உலர்களங்கள் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**2.10. நெல் வணிக வளாகம்**

மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணியில் 9.85 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் வணிக வளாகம் ரூ.1706 இலட்சம் செலவில் மதுரை விற்பனைக்குழு நிதியைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நெல், இடுபொருள் மற்றும் மலர் வியாபாரிகளுக்காக மொத்தம் 314 கடைகள் கட்டப்பட்டுள்ளது. இவ்வணிக வளாகத்தில் மதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்,

ஊரக கிட்டங்கி, ஏலக்கொட்டகை, உணவு விடுதி, வங்கி, அஞ்சலகம், தொலைபேசி இணைப்பகம், தீயணைப்புக் கருவிகள் ஆகிய வசதிகள் உள்ளன.

2011–2012ஆம் ஆண்டில் இவ்வணிக வளாகத்தில் 1,07,139 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் வரப்பெற்று ரூ. 94.24 இலட்சம் சந்தைக் கட்டணமாக விற்பனைக்குழுவிற்கு வருவாய் பெறப்பட்டுள்ளது.

**2.11. வேளாண் விளைபொருள் பேரங்காடி**

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கென ரூ.308 இலட்சம் செலவில் வேளாண் விளைபொருள் பேரங்காடி 15.50 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டு பயன்பாட்டிலுள்ளது. இந்த பேரங்காடியில் 50 கடைகள், 216 தரை வாடகை கடைகள், தரம் பிரிப்பு அறை மற்றும் வர்த்தக அறை போன்ற வசதிகள் உள்ளன.

**2.12. மலர் ஏல மையம்**

திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறில் மலர் உற்பத்தியாளர்களின் நலனுக்கென ரூ.163.40 இலட்சம் செலவில் மலர் ஏல மையம் ஒன்று அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. சராசரியாக நாளொன்றுக்கு ரூ.0.55 இலட்சம் மதிப்புடைய 300 கிலோ மலர்கள் வணிகம் செய்யப்படுகிறது.

**2.13. அக்மார்க் தரம் பிரிப்பு**

''அக்மார்க்'' என்பது 'அக்ரிகல்சுரல் மார்க்கிங்' என்பதன் சுருக்கமாகும். இத்திட்டம் வேளாண் விளைபொருள் (தரம் பிரிப்பு மற்றும் குறியிடுதல்) 1937 சட்டத்தின்படி தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான வேளாண், தோட்டக்கலை, வனப்பொருள் மற்றும் கால்நடை உப பொருட்கள் இத்திட்டத்தின் கீழ் தரம் பிரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும், சென்னையில் ஒரு முதன்மை ஆய்வகமும் கலப்படமற்ற தரமான



உணவுபொருட்கள் நுகர்வோர்க்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றன. அக்மார்க் தரம்பிரிப்பின் கீழ் மத்திய தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப்பண்டங்கள் மற்றும் மத்திய தொகுப்பிற்கு உட்படாத உணவுப்பண்டங்களுக்கு தரம் பிரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் அரிசி, பருப்பு வகைகள், தாவர உணவு எண்ணெய் வகைகள், நெய், தேன், மசாலாப் பொடிகள், முழு மசாலாப் பொருட்கள், கோதுமைப் பொருட்கள், ஜவ்வரிசி, பதப்படுத்தப்பட்ட தேங்காய் பொடி, புளி, கூட்டுப் பெருங்காயம் மற்றும் பல பொருட்கள் அக்மார்க் திட்டத்தில் தரம் பிரிக்கப்படுகின்றன.

சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு உணவுப் பண்டங்களின் தரம் மற்றும் தன்மை அடிப்படையில் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மேற்பார்வையில் ''அக்மார்க்'' முத்திரை இடப்படுகிறது. 2011–2012ஆம் ஆண்டில் 16.20 இலட்சம் குவிண்டால் உணவுப் பண்டங்கள் மாநில அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வகங்களால் தரம்பிரிக்கப்பட்டுள்ளது.

2011–2012ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் யு.வி.விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டர், மின்னணு ஈரப்பதமானி, மின்னணு மஃபல் பர்னஸ், மின்னணு ரெஃப்ராக்டோ மீட்டர் மற்றும் மின்னணு ஹாட்டேர் ஓவன் ஆகிய ஆய்வக உபகரணங்கள் ரூ. 38.49 இலட்சம் மதிப்பில் மாநில அக்மார்க் ஆய்வகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2012–2013ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.30.40 இலட்சம் மதிப்பில் 5 எண்கள் யு.வி.விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டர் மற்றும் 18 எண்கள் மின்னணு ஈரப்பதமானி வாங்கப்படவுள்ளது.

**2.14. உழவர் சந்தைகள்**

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு உரிய விலை கிடைக்கவும், இடைத்தரகர்கள் குறுக்கீடின்றி அதனை நியாயமான விலையில் பசுமையாக நுகர்வோர் வாங்கி பயன்பெறவும் உழவர் சந்தைகள்

செயல்படுகின்றன. தற்போது தமிழகத்தில் 179 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. விவசாயிகளுக்கு கடைகள், மின்னணு எடைத் தராசுகள் முதலில் வருவோருக்கு முன்னுரிமை அளித்து ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. விற்பனைக்குழு நிதியிலிருந்து உழவர் சந்தைகளின் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3. வேளாண் வணிக செயல்பாடுகள்**

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைத்தல் மற்றும் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல் ஆகியவை விவசாயிகளின் விளைபொருட்களுக்கு அதிக விலை கிடைக்க உதவுகிறது. இதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான சேமிப்பு கிட்டங்கிகள், தரம் பிரித்தல் மற்றும் வகைப்படுத்துதல் கூடம், உலர்களங்கள், பரிவர்த்தனைக் கூடங்கள், ஏல அறை, முன்குளிர்விப்பான் அறை, குளிர்ப்பதன வசதி, பழுக்கவைக்கும் அறை போன்ற வசதிகளுடன் பல்வேறு சிறப்பு வணிக வளாகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**3.1. மாங்கனிக்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்**

சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலன் கருதி கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் மாங்கனிக்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதி மற்றும் மாநில அரசின் நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

**3.2. தக்காளிக்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்**

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் தக்காளிக்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதி மற்றும் மாநில அரசின் நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ளது.



சேலம் மாவட்டம், மேச்சேரியில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன வசதி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 420 விவசாயிகள் கொண்ட 28 தக்காளி விளைபொருள் குழுக்கள் இந்த வசதியை பயன்படுத்திக்கொண்டு வருகின்றனர். 2011–2012ஆம் ஆண்டு 49.80 மெட்ரிக் டன் தக்காளி குளிர்ப்பதன கிடங்கில் சேமிக்கப்பட்டுள்ளது.

**3.3. திராட்சைக்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்**

சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலனுக்காக தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் திராட்சைக்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதி மற்றும் மாநில அரசின் நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ளது. வணிக வளாகம் சிறப்பாக செயல்பட திராட்சைக்கென விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

**3.4. வெங்காயத்திற்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்**

சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலனுக்காக திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் வெங்காயத்திற்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதி மற்றும் மாநில அரசின் நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 120 விவசாயிகளால் 29 மெட்ரிக் டன் வெங்காயம் குளிர்ப்பதன கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

**3.5. தேங்காய்க்கென வணிக வளாகம்**

தஞ்சாவூர் மாவட்டம், பொன்னவராயன்கோட்டை, உக்கடை கிராமத்தில் ரூ.400 இலட்சம் மதிப்பில் தேங்காய்க்கென, தஞ்சாவூர் விற்பனைக்குழு மற்றும் மாநில அரசு நிதி மூலம் வணிக

வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. பரிவர்த்தனைக் கூடம், சேமிப்புக் கிட்டங்கி, உலர்களம், சூரிய ஒளி கொப்பரை உலர்விப்பான், தரம்பிரித்தல் மற்றும் வகைப்படுத்துதல் கூடம், இடு பொருள் கடைகள், வணிகர்களுக்கான கடைகள், தேங்காய் ஓடு உடைக்கும் கூடம், மின்னணு எடைக்கருவிகள், தானியங்கி சிப்பம் கட்டும் வசதியுடன் கூடிய எண்ணெய் பிழிந்து எடுக்கும் ஆலை போன்ற வசதிகள் தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில் இவ்வணிக வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம், பெதப்பம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் தேங்காய்க்கென வணிக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 170 தென்னை விவசாயிகளால் 22 மெ.டன் தேங்காய் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. 10 மெ.டன் கொப்பரை இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

**3.6. வெங்காயத்திற்கென சேமிப்பு கிடங்கு மற்றும் இதர காய்கறிகளுக்கென குளிர்ப்பதன கிடங்கு**

பெரம்பலூர் மாவட்டம், செக்கிகுளம் கிராமத்தில் வெங்காயத்திற்கென சேமிப்புக் கிடங்கு மற்றும் இதர காய்கறிகளுக்கென குளிர்ப்பதன கிடங்கு ரூ.114.90 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகிறது.

**3.7 . மலைக் காய்கறிகளுக்கென குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்**

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மலைக் காய்கறிகளுக்கென ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 15 மலைக் காய்கறி விளைபொருள் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு 225 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.



**3.8. மிளகாய்க்கென குளிர்ப்பதன கிடங்கு**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மிளகாய்க்கென 100 மெ.டன் கொள்ளளவு உள்ள குளிர்ப்பதன கிடங்கு ரூ.99.50 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகிறது.

**3.9. வாழை பழுக்கவைக்கும் கூடம்**

வாழைப்பழம் பொதுவாக பதப்படுத்துதல் ஏதுமின்றி பழமாகவே உண்ணப்படுவதால், அறுவடைபின்செய் நேர்த்தி மேலாண்மை அதிகமாக தேவைப்படுகிறது. வாழையில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பு 30 முதல் 40 சதவீதமாகும். சேமிப்புக்கான தொழில் நுட்பங்கள் இல்லாததால், 2 முதல் 3 சதவீதம் மட்டுமே பதப்படுத்துதலுக்கு பயன்படுத்தப்படுகிறது. வாழைப்பழம் சுத்தம் செய்யப்பட்டு, சிப்பமிட்டு தரக் கட்டுப்பாட்டிற்குப் பிறகு நுகர்வோருக்கு சென்றடையும் முன்னர் ஒரே சீராக பழுக்க வைக்க திருச்சி, ஸ்ரீவைகுண்டம், சின்னமனூர் மற்றும் மோகனூரில் வாழை பழுக்கவைக்கும் கூடம் மொத்தம் ரூ.200 இலட்சம் மதிப்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. வாழை பழுக்க வைக்கும் மையத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், உரிய விலை கிடைக்கச் செய்யவும் திருச்சி, மோகனூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் ஆகிய இடங்களில் தலா 10 வாழை விளைபொருள் குழுக்களும், சின்னமனூரில் 17 வாழை விளைபொருள் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**3.10. 2011–2012ஆம் நிதியாண்டில் அமைக்கப்பட்டு வரும் வணிக வளாகங்கள் மற்றும் குளிர்ப்பதன கிடங்குகள்**

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் மொத்தம் ரூ.1920 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது.

- திருச்சி மாவட்டம், திருச்செந்துறை கிராமத்தில் வாழைக்கென வணிக வளாகம் மற்றும் காய்கறிகளுக்கென

1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன கிடங்கு.

- ஈரோடு மாவட்டம், அலுக்குளி கிராமத்தில், காய்கறி மற்றும் பழங்களுக்கு 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன கிடங்குடன் கூடிய வணிக வளாகம்.
- திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், எலுமிச்சைக்கென 200 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன கிடங்குடன் கூடிய வணிக வளாகம்.
- காய்கறி மற்றும் பழங்களுக்கென 5 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தலா 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன கிடங்குகள்
- தர்மபுரி மாவட்டம், தர்மபுரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் புளிக்கென 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன கிடங்கு.
- திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மிளகாய்க்கென 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன கிடங்கு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 03.03.2012 அன்று ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் குளிர்ப்பதன கிடங்குடன் கூடிய வணிக வளாகங்களும், தர்மபுரி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் குளிர்ப்பதன கிடங்குகளும் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

### 3.11. விற்பனை முனையங்கள் ஏற்படுத்துதல்

நடுவண் அரசின் திருந்திய நெறிமுறைப்படி விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர பொருட்கள் ஆகியவற்றில் அறுவடைக்குப்பின் ஏற்படும் சேதாரங்களைக் குறைக்கவும், மதிப்புக் கூட்டவும் விற்பனை முனையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய



மூன்று பெரு நகரங்களுக்கு அருகில் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் பங்கேற்கும் வகையில் ஏற்படுத்தப் பட்டுவருகிறது.

இவ்விற்பனை முனையங்கள் 'அச்சு மற்றும் ஆரம்' அமைப்பில் செயல்படும். 'அச்சு' என்பது சேகரிப்பு மையம், தரம் பிரிக்கும் அறை, சிப்பம் கட்டும் அறை, குளிர்ப்பதன அறை, மின்னனு ஏல மையம், பழம் பழுக்க வைக்கும் அறை, தரக்கட்டுப்பாடு ஆய்வகம் போன்ற பல நவீன உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டது. 'ஆரம்' என்பது விளைபொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களில் சேகரிப்பு மையங்களைக் கொண்டது. குறைந்தபட்சம் 20 இடங்களில் நவீன சேகரிப்பு மையங்கள் விற்பனை முனைய பகுதிக்குட்பட்டு அமைக்கப்படும். விற்பனை முனையங்கள் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக கலந்தாலோசகர் (Consultant) நிறுவனமாக இட்காட் (ITCOT) தேர்வு செய்யப்பட்டுள்ளது.

#### 3.11.1. பெருந்துறை விற்பனை முனையம்

ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை விற்பனை முனையம் அமைப்பதற்காக 47.9 ஏக்கர் நிலம் பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் தேர்வு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.12063 இலட்சமாகும். விற்பனை முனையம் அமைக்க திருவாளர் ஸ்பேக் டாபியோகா ப்ராடெக்ஸ் (இந்தியா) லிமிடெட், நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு அந்த நிறுவனம் கோரிய மானியத் தொகை ரூ.2899 இலட்சம் மத்திய அரசால் இறுதி செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் திருவாளர். ஸ்பேக் டெர்மினல் மார்க்கெட் காம்ப்ளக்ஸ் லிமிடெட், ஈரோடு நிறுவனமும் சேர்ந்து 27.02.2011 அன்று விற்பனை முனையத்திற்கான இயக்குதல் மற்றும் மேலாண்மை வளர்ச்சி ஒப்பந்தத்தில் (OMDA) கையெழுத்திட்டது. மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களால் 03.03.2012 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இவ்விற்பனை முனையம் நாள் ஒன்றுக்கு 1500 மெட்ரிக் டன் அழுகும் மற்றும் பிற வேளாண் விளைபொருட்களை கையாளும் திறன் கொண்டது. இதுபோல சேகரிப்பு மையங்களும் நாளொன்றுக்கு 75 டன் விளைபொருட்களை கையாளும் திறன் கொண்டதாக இருக்கும். இவ்விற்பனை முனையத்தின் மூலம் 7 மாவட்டங்களில், சுமார் 1 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறுவார்கள். இவ்விற்பனை முனையத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட வியாபாரிகள் முனைப்புடன் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வேளாண் விளைபொருட்களை கொள்முதல் செய்வர். இவ்விற்பனை முனையத்தின் மூலம் உள்ளூரிலுள்ள 200 நபர்களுக்கு நேரடியாகவும், 800 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கப்படும். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் அளித்த திட்ட அறிக்கை மற்றும் பெருந்திட்டம், இட்காட் (ITCOT) நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**3.11.2 சென்னை விற்பனை முனையம்**

சென்னையில் விற்பனை முனையம் அமைப்பதற்கு திருப்பெரும்புதூர் தாலுக்கா நாவலூர் கிராமத்தில் 35 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.11385 இலட்சமாகும். உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி மூலம் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தகுதி கோரும் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, தற்பொழுது தகுதி கோரும் பிரேரணை, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**3.11.3. மதுரை விற்பனை முனையம்**

மதுரையில் விற்பனை முனையம் அமைப்பதற்கு முக்கம்பட்டியில் 35 ஏக்கர், திருவாதவூரில் 15 ஏக்கர் என மொத்தம் 50 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.10505 இலட்சமாகும். உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி மூலம் தனியார்



நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தகுதி கோரும் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, தற்பொழுது தகுதி கோரும் பிரேரணை, தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பபட்டுள்ளது.

**3.12. வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்**

உலகமயமாக்குதல் மற்றும் தாராளமயமாக்குதல் மூலம் தேசிய மற்றும் மாநில பொருளாதாரத்தில் பன்னாட்டு வர்த்தகம் முக்கிய பங்கு வகிக்க துவங்கியுள்ளது. தமிழகத்தில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் உருவாக்கப்படுவதன் மூலம் வேளாண் விளைபொருட்களில் இழப்பு குறைக்கப்பட்டு, ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிக்கப்படுகிறது. ஏற்றுமதி மண்டலங்கள் வாயிலாக பொருட்களுக்கு மதிப்புக்கூட்டப்பட்டு, விவசாயிகளுக்கு சீரான மற்றும் உரிய விலை கிடைப்பதுடன், நுகர்வோருக்கு பதப்படுத்தப்பட்ட பொருட்கள் வருடம் முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை தரம் பிரித்து, மதிப்புக் கூட்டி, நேரடியாக ஏற்றுமதி செய்வதற்காக, நவீன உட்கட்டமைப்பு வசதிகளான குளிர்ப்பதன கிட்டங்கி, தரம் பிரிப்புக் கூடம், சிப்பம் கட்டும் அறை, பதப்படுத்தும் நிலையம், குளிரூட்டப்பட்ட வாகனங்கள் ஆகிய வசதிகளுடன் கூடிய வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் நான்கு இடங்களில் தனியார் பங்கேற்புடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து வேளாண் ஏற்றுமதி மண்டலங்களிலும் நவீன நாற்றங்கால், பதப்படுத்துதல் மற்றும் சேமிப்பு வசதிகள் கொண்ட உட்கட்டமைப்புகள் தனியார் நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்டு, வணிக ரீதியிலான உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

**3.12.1. கொய்மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் கொய்மலர்களுக்கென டிட்கோ நிறுவனமும் டான்ஃபுளோரா நிறுவனமும் இணைந்து ரூ.2485 இலட்சம் மதிப்பில் ஏற்றுமதி மண்டலம் அமைத்துள்ளது. இந்த மண்டலத்தில் தரம்பிரித்தல், சிப்பம் கட்டுதல் ஆகியவற்றை

உள்ளடக்கிய மத்திய சிப்பம் கட்டும் கூடம், பதப்படுத்தும் நிலையம், குளிரூட்டும் நிலையம் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன. 2011–2012ஆம் ஆண்டில் திருவாளர் டான்ஃபுளோரா நிறுவனம் ரூ.125 இலட்சம் மதிப்பிலான கொய்மலர்களை வர்த்தகம் செய்துள்ளது.

### 3.12.2. மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம்

நீலகிரி மாவட்டம், ஊட்டியில் மலர்களுக்கென ரூ. 1589 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் தனியார் நிறுவனமான திருவாளர் நீல்ஃபுளோராவால் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்தில், ஏல மையம், நாற்றங்கால், முன்குளிர்விப்பான், குளிர்ப்பதன கிட்டங்கிகள், குளிரூட்டப்பட்ட வாகனம், நவீன மலர் சாகுபடி பயிற்சி மையம் மற்றும் தொழில்நுட்ப தகவல் மையம் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக விவசாயிகளுக்கு நவீன மலர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுவதுடன், சாகுபடிக்குத் தேவையான கன்றுகள் 50 சதவீத மானியத்திலும், பசுமை குடில்கள், நிழல் வலைகள் அமைக்கவும், மானியம் தவிர தொழில்நுட்ப ஆலோசனை வழங்கவும், இதர தோட்டக்கலை தொடர்பான விபரங்கள் வழங்கவும் ஊட்டியில் ஒரு தகவல் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மின்னணு மலர் ஏல மையம் ரூ.11 இலட்சம் செலவில் ஊட்டியில் அமைக்கப்பட்டு, விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012ஆம் ஆண்டில் திருவாளர் நீல்ஃபுளோரா நிறுவனம் ரூ.114 இலட்சம் மதிப்பிலான மலர்களை வர்த்தகம் செய்துள்ளது.

### 3.12.3. மாங்கனிக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம்

மாங்கனிக்கென தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.2100 இலட்சம் மதிப்பீட்டில், தனியார் நிறுவனம் திருவாளர்



மாக்கிரீட்டா எக்ஸ்போர்ட் லிமிடெட் மூலம் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டலத்தில் சிப்பம் கட்டும் கூடம், சேகரிப்பு மையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், தரம்பிரிப்பு கூடம், பழக்கூழ் பதப்படுத்தும் நிலையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2011–2012ஆம் ஆண்டில் திருவாளர் மாக்கிரீட்டா எக்ஸ்போர்ட் லிமிடெட் நிறுவனம் ரூ.101 இலட்சம் மதிப்பிலான மாம்பழம் மற்றும் மாம்பழக்கூழ் வர்த்தகம் செய்துள்ளது.

### 3.12.4 முந்திரிக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம்

முந்திரிக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம், கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களை உள்ளடக்கி, திருவாளர் சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் மற்றும் டிட்கோ நிறுவனம் போன்ற முன்னோடி நிறுவனங்கள் இணைந்து ரூ.1700 இலட்சம் மதிப்பீட்டில் கடலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டலத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிப்பம் கட்டும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஐந்து கிராமங்களில் காந்தி ஊரக கல்வி மற்றும் மேம்பாட்டு சங்கத்துடன் (GREDS) இணைந்து இயற்கை வழி விவசாயம் செய்யும் 6 சுய உதவிக்குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. 2011–2012ஆம் ஆண்டில் திருவாளர் சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட் நிறுவனம் ரூ.24 இலட்சம் மதிப்பிலான முந்திரியினை வர்த்தகம் செய்துள்ளது.

### 3.13. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள்

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளால் விவசாயிகளுக்கு சீரான விலையும், நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் பதப்படுத்திய, பக்குவப்படுத்தப்பட்ட உணவுப்பொருளும் கிடைப்பதால், இத்தொழில் தற்போது முக்கியத்துவம் அடைந்து வருகிறது. உணவு பதப்படுத்தும் தொழில் மூலம் பெருமளவில் விளைபொருட்களின் இழப்பு குறைக்கப்படுகிறது.

தற்சமயம் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இவ்வமைச்சகம், உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும் ஏப்ரல்–2007 முதல் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலமாக பரவலாக்கப்பட்ட திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

மத்திய அமைச்சகத்தின் இதர திட்டங்களான தொழில் முனைவோர் பயிற்சி, ஒப்பந்தப் பண்ணையம், உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம், கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி, உட்கட்டமைப்பு வசதிகள், உணவு பரிசோதனை ஆய்வகம், உணவுப் பூங்காக்கள் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் மத்திய அரசின் முகமையாக உள்ள இத்துறை மூலம் பரிசீலிக்கப்பட்டு மானியம் பெற மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இதுவரை மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் அமைச்சகத்தின் மூலம் 218 திட்டங்களுக்கு ரூ. 4406.91 இலட்சம் நிதியுதவியாகப் பெறப்பட்டுள்ளது. 1.4.2012 முதல் உணவு பதப்படுத்தும் அமைச்சகத் திட்டத்தினை மாநில அரசு மூலம் மீண்டும் நடைமுறைப்படுத்திட மத்திய அரசு உத்தேசித்துள்ளது.

### 3.13.1. தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம்

பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம், மத்திய அரசு திட்டத்தின் கீழ் புதிய தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் மாநிலங்கள் மூலமாக செயல்படுத்தப்பட உள்ளது. மாநிலங்களின் பங்கேற்புடன் திட்டத்தை பன்முகப்படுத்தி செயல்படுத்துவதே தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தை செயல்படுத்திட தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் இயக்கங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் மூலமாக அமைச்சகம் திட்டம் வகுத்து, கண்காணித்து அதனை மேற்பார்வையிடும்.

-



இத்திட்டம் மத்திய மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் புதிய திட்டமாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் நோக்கம்**

1. முறைப்படுத்தப்படாத உணவு பதப்படுத்துவோரின் திறமை மற்றும் மேம்பாட்டு வளர்ச்சி முதலீட்டுத் திறன், தொழில் நுட்ப பரிமாற்றம், செயல் திறன் மேம்பாடு போன்ற உதவி புரிதல்.
2. உணவு பதப்படுத்தும் பிரிவில் இயங்கி வரும் சுய உதவி குழுக்களுக்கு உயர் நிலை அடைய உதவுதல்.
3. பயிற்சி நிறுவனங்கள் மூலம் செயல்திறனை மேம்படுத்துவதால் நிலையான வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதுடன், உணவு பதனிடும் தொழில் நுட்பம் தெரிந்த பணியாளர்களை அதிக அளவில் உருவாக்குதல்.
4. உலகத் தர நிர்ணயித்திற்கேற்ப தரமான சுகாதாரமான உணவு பொருட்களை தயாரித்தல்.
5. HACCP மற்றும் ISO தரத்திற்கேற்ப உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை ஏற்படுத்த உதவுதல்.
6. பண்ணை அளவில் கட்டுமானப்பணிகள், கிடங்கு, பதப்படுத்தும் கொள்ளளவினை அதிகரித்தல்.
7. நெறிமுறைப்படுத்தப்பட்ட உணவு பதப்படுத்தும் தொழிலகங்களுக்குத் தேவையான உதவி புரிதல்.

தற்போது செயல்படுத்தப்பட உள்ள தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் அமைப்பு, 3 அடுக்குகளாக அதாவது தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்பட உள்ளது.

**தேசிய அளவில்** உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் துறை அமைச்சர் தலைவராக இருப்பார். அமைச்சகத்தின் செயலாளர் தலைமையில் செயற்குழு அமைக்கப்படும். இச்செயற்குழு அமைச்சகத்திற்கும், மாநில அரசிற்கும்

இணைப்பாக இருக்கும். இயக்கத்தின் இயக்குநராக இணை செயலாளர் செயல்படுவார்.

**மாநில அளவில்** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவராக இருப்பார். தலைமைச் செயலர் மற்றும் வேளாண் உற்பத்தி ஆணையர் ஆகியோர் கொண்ட செயற்குழு திட்டத்தை செயல்படுத்துவதற்கு பொறுப்பாகும். மாநில அளவில் இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர் இயக்கத்தின் இயக்குநராக செயல்படுவார்.

**மாவட்ட அளவில்** துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) உணவு பதப்படுத்துதலுக்கு முகமை அலுவலராக செயல்படுவார். மூன்று அடுக்குகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து உணவு பதப்படுத்தும் இயக்ககத்தை செயல்படுத்தும்.

**தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் விவரம்.**

1. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை உருவாக்குதல் / நவீனப்படுத்துதல் / விரிவு படுத்துதல்.
2. தோட்டக்கலை பயிர்கள் அல்லாத பொருட்களுக்கு குளிரூட்டப்பட்ட வசதிகள் மற்றும் குளிரூட்டப்பட்ட வாகனங்கள் வாங்குதல்.
3. மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள்

   அ) உணவு பதப்படுத்தும் தொழில் நுட்பங்கள் தொடர்பான பட்டம், பட்டயம், சான்றிதழ் படிப்புகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

   ஆ) தொழில் முனைவோர் பயிற்சி

   இ) உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம்.
4. மேம்பாட்டுத் திட்டங்கள்

   அ) கருத்தரங்கு / பணிமனைக் கூட்டம் நடத்துதல்

   ஆ) படிப்பு மற்றும் கணக்கெடுப்பு.



இ) கருத்துக் காட்சி மற்றும் கண்காட்சி அமைக்க உதவுதல்.

ஈ) விளம்பரம் மற்றும் பிரச்சாரம்.

**3.14. விவசாயிகளின் பங்களிப்புடன் வேளாண் பதப்படுத்தும் மையங்கள்**

மேதகு ஆளுநர் அவர்கள் 2011 சட்டப்பேரவை உரையில் விவசாயிகள் மற்றும் தனியார் பங்கேற்புடன் 5 வேளாண் பதப்படுத்தும் மையங்கள் தொடங்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, பயறு வகைக்காக புதுக்கோட்டை மாவட்டத்திலும், தக்காளிக்காக தர்மபுரி மாவட்டத்திலும், வாழைக்காக தேனி மாவட்டத்திலும், கொப்பரைக்காக கோயம்புத்தூர் மாவட்டத்திலும், நிலக்கடலைக்காக விழுப்புரம் மாவட்டத்திலும், ஆக 5 இடங்களில் மொத்தம் ரூ.2000 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் பதப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளது. இவை 75 சதவீதம் தனியார் மற்றும் 25 சதவீதம் விவசாயிகள் பங்களிப்புடன் தோற்றுவிக்கப்பட உள்ளது. விவசாயிகளின் பங்களிப்பான 25 சதவீதத்தை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். இத்திட்டத்திற்கான தொழில் முனைவோரை தேர்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.15. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்.**

தமிழகத்தின் உபவடி நிலப்பகுதிகளிலுள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் நீர்வள நிலவளத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

நீர்வள நிலவளத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் 61 உபவடி நிலப்பகுதிகளில் 2007–2008 முதல் 2012–2013 வரை 6 ஆண்டுகளில் ரூ.3417 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012ஆம் நிதியாண்டு வரை 4 கட்ட உபவடி நிலப்பகுதிகளிலும் மொத்தம் ரூ.2686 இலட்சம் செலவில் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலர்களங்கள் மற்றும் சேமிப்புக் கிட்டங்கிகள் சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒரு அடித்தள கட்டமைப்பாகும். இதுவரை **21** வேளாண் வணிக மையங்கள், **94** சேமிப்புக் கிட்டங்கிகள், **155** உலர்களங்கள், **18** சேகரிப்பு மையங்கள் மற்றும் ஒரு சிப்பம் கட்டும் அறை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் இத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்தும் விதமாக **52** ஈரப்பதமானிகள், **118** மின்னணு எடைத்தராசுகள், **522** தார்பாலின்கள், **1985** அட்டகங்கள், **19** இணையதள வசதியுடனான கணினிகள், **575** கிரேட்டுகள், **8** மினி ஆட்டோக்கள் மற்றும் ஒரு மினி லாரி ஆகியன வழங்கப்பட்டு விளைபொருள் குழு விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது.

**3.15.1 பண்ணை வருவாயை அதிகரிப்பதில் விளைபொருள் குழுக்களின் பங்கு**

விளைபொருள் அடிப்படையில் உழவர்களை கிராம/வட்டார அளவில் ஒருங்கிணைத்து சந்தைப்படுத்துதலில் உள்ள தடைகளை சமாளிக்கும் வகையில் விளைபொருள் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இதன்மூலம், தொழில்நுட்ப அறிவினை வழங்குவதுடன், அவர்களின் செயல்திறனை, வளங்களை, கட்டமைப்பு வசதிகளை, சந்தை அறிவினை வளர்த்துக்கொள்ளவும், தங்களிடையே தகவல்களை பரிமாறிக்கொள்ளவும், வங்கிக் கடன் வசதிகளை பெறவும், இதன்மூலம் தங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்ளவும் இக்குழு அமைப்பு உதவுகிறது. மேலும் உபவடி நிலப்பகுதிகளில், விளைபொருள் குழுக்களை அமைத்து, விளைபொருட்களை சந்தைபடுத்த வணிகர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் கூடுதல் வருவாயை உழவர்கள் பெற வாய்ப்பாக உள்ளது.

உழவர்களும், வணிகர்களும் நேரிடையாக சந்தித்து விற்பனை வாய்ப்பை உறுதிப்படுத்தும் தளமாக கூட்டுப்பணிமனை அமைகிறது. இதுவரை **14** முக்கிய விளைபொருட்களில் **1657** விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டு, **1179** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



விளைபொருள் குழு விவசாயிகள், உள்ளூர் மற்றும் வெளி மாநில சந்தைகள், மதிப்புக் கூட்டும் வழிமுறைகள், பல்வேறு விளைபொருட்கள் குறித்த சந்தை அறிவு, பிற இடங்களில் சந்தை இயங்கும் விதம் ஆகியவற்றை நேரிடையாக சென்று அறிந்து கொள்ளும் வகையில் பட்டறிவுப் பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை **195** உள் மாநில பட்டறிவு பயணங்கள், **99** வெளி மாநில பட்டறிவு பயணங்கள், **265** தொழில்நுட்ப பயிற்சிகள், **213** கூட்டு பணிமனைகள் என மொத்தம் **772** பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி **47,227** விளைபொருள் குழு விவசாயிகள் இதுவரை **1,22,613** மெட்ரிக் டன் விளைபொருட்களை சந்தைப்படுத்தி ரூ.**1,247** இலட்சம் கூடுதல் வருவாயினை பெற்றுள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **03.03.2012** அன்று, **2** வேளாண் வணிக மையங்கள், **7** சேமிப்புக் கிடங்குகள், **4** சேகரிப்பு மையங்கள் மற்றும் **22** உலர்களங்கள் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டது.

**2012–2013**ஆம் நிதியாண்டில் இத்திட்டமானது கட்டம் **4**, கூடுதல் பணிகளாக கட்டம் **1** முதல் **4** மற்றும் அமராவதி உபவடி நிலப்பகுதி செயல்பாடுகள் என மொத்தம் ரூ.**549.09** இலட்சம் மதிப்பீட்டில், ஒரு வேளாண் வணிக மையம், **22** சேமிப்புக் கிட்டங்கிகள், **45** உலர்களங்கள் மற்றும் **2180** தளவாடச் சாமான்களான **591** தார்பாலின்கள், **786** அட்டகங்கள், **36** ஈரப்பதமானிகள், **42** மின்னணு எடைத்தராசுகள், **720** கிரேட்டுகள், **2** கொப்பரை உலர்த்தும் கருவிகள், **2** தென்னை நார் பிரித்தெடுக்கும் கருவிகள் மற்றும் **1** கணினி ஆகியன விளைபொருள் குழு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகளின் சந்தை அறிவு மற்றும் திறனை மேம்படுத்தும் வகையில் **25** தொழில்நுட்ப பயிற்சிகள், **30** கூட்டுப்பணிமனைகள், **3** பட்டறிவு உள்மாநில

பயணங்கள், 5 விழிப்புணர்வு முகாம்கள் என மொத்தம் 63 பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது.

**3.16. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு**

தமிழகத்தில் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேவையான தொடர்புகளை ஏற்படுத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தை முறைகளைக் கடைபிடிக்கச் செய்வதன் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு முறைப்படுத்தப்பட்ட / முறைப்படுத்தப்படாத சந்தை ஏற்பாடுகள் மூலம் உறுதி செய்யப்பட்ட கொள்முதல் மற்றும் கூடுதல் விலையும் கிடைக்க அவர்களை ஈடுபடுத்தி செயல்படுவதே, தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் நோக்கமாகும். இவ்வமைப்பு அரசு, தனியார், கூட்டுறவு சங்கங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் சேவை நிறுவனங்களுடன் இணைந்து மேற்கண்ட குறிக்கோள்களை அடைய செயல்படுகிறது.

**உதவி பெற தகுதிகள்:**

- மதிப்புக் கூட்டுதல் தொடர்பான திட்டங்கள் கோழிப்பண்ணை மற்றும் பால் பதப்படுத்தும் தொழில்கள் தவிர்த்து பின்வரும் ஏதேனும் ஒன்றினைச் சார்ந்ததாக இருத்தல் வேண்டும். விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில், தோட்டக்கலை, மூலிகை மற்றும் நறுமணப்பயிர்கள், முந்திரி, தென்னை மற்றும் மீன் வளர்ப்புத் தொழில்.
- திட்டங்கள், விவசாயிகளை லாபகரமான, நிரந்தரமான சந்தைப்படுத்தும் வாய்ப்பினை தருதல் வேண்டும்.
- திட்டங்கள், விவசாயிகளுக்கு அதிக லாபம் தரக்கூடிய பயிர்களை சாகுபடி செய்ய ஊக்குவிக்க வேண்டும்.
- திட்டங்கள், வங்கி நிதியுதவி வழங்குவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.



இவ்வமைப்பு, தொழில் தொடங்க மூலதன முதலீட்டுத்தொகை மற்றும் திட்ட மேம்பாட்டு வசதிகள் வழங்கி தமிழகத்தில் வேளாண் வணிகம் மேம்பட உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 43 வேளாண் வணிக நிறுவனங்களுக்கு தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ.1530.43 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**3.17. திருச்சியில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் அமைத்தல்**

விவசாயிகள் விளைபொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களினால் பாதிப்படையாமல் பாதுகாக்கப்பட முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். இதற்காக விலை முன்னறிவிப்பு, அதிக விலை பெறும் காலம், சிறந்த விலை வழங்கும் சந்தை, தர அளவுகோல், விளைபொருட்களுக்கு அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய தொழில்நுட்பம், ஏற்றுமதி வாய்ப்புகள் போன்ற விவரங்கள் விவசாயிகளுக்கு வழங்கி மேம்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளின் திறன் மேம்பாடு மற்றும் சந்தை உட்கட்டமைப்புத் தேவைகளை கண்டறிந்து, அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்பங்களை வழங்குவதால், விவசாயிகள் சந்தை சார்ந்த வேளாண்மையை பின்பற்றி மாற்றுப் பயிர் சாகுபடி மூலம் அதிக வருவாய் கிடைக்க வழிவகை ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு 2012–2013ஆம் ஆண்டில், பகுதி 2 திட்டத்தின் கீழ் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் திருச்சியில் ரூ.43 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையத்திற்கு தேவையான தகவல்களை சேகரிக்க, துறை ஒருங்கிணைப்பு சேவைகள் மாற்றுப்பணி அடிப்படையில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக அலுவலர்கள் மூலமாக வழங்கப்படும். மேலும், தகவல்களை சேகரித்து, பகுப்பாய்வு

செய்து, அறிக்கையாக தொகுக்க ஒப்பந்த அடிப்படையில் நான்கு தொழில்நுட்ப ஆலோசகர்களும் தகவல்களை ஆய்வு செய்து விலை முன்னறிவிப்பு செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு தொழில்நுட்ப வல்லுநர்களும் நியமிக்கப்படுவர். வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மைய அலுவலர்களுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலமாக உரிய பயிற்சிகள் வழங்கப்படும். வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையத்தில் பதிவு செய்த விவசாயிகளுக்கும், வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கும் மற்றும் பிறருக்கும் குறுந்தகவல்கள் மூலமாக பயிர் மற்றும் சந்தை சார்ந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.

சந்தை வாய்ப்புகளை பயன்படுத்துதல், எதிர்வரும் காலத்தில் சந்தை விலை நிலவரம், நடப்பு அல்லது அடுத்த பருவத்தில் அதிக விலைபெற்றுத் தரக்கூடிய பயிர் விவரங்கள் போன்றவற்றுடன் தொழில்நுட்ப மற்றும் இடுபொருள் சேவைகள், பொருளீட்டுக் கடன், அறுவடைக்குப்பின் பதப்படுத்தும் தொழில்நுட்பம், மதிப்புக்கூட்டுதல் போன்ற பல்வேறு பயிர் மற்றும் சந்தை சார்ந்த ஆலோசனை சேவைகள் அனைத்தும் இம்மையத்தின் மூலமாக ஒரே இடத்தில் கிடைக்குமாறு வழங்கப்படும்.

## 3.18. 2012–2013 ஆம் நிதியாண்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நபார்டு திட்டம், விற்பனைக்குழுக்கள் நிதி மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதியின்கீழ் பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் 2012–2013ஆம் ஆண்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த மலர்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்ற வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களை நீண்ட நாள் கெடாமல் வைத்திருக்க குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. இதன் தொடர்ச்சியாக குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் மலர்களுக்கென ஒன்றும்,



காய்கறி மற்றும் பழங்களுக்கென இரண்டும், குளிர்ப்பதன கிட்டங்கிகள் பழங்கள் மற்றும் காய்கறிக்கென ஒன்றும், மிளகாய்க்கென ஒன்றும், இது தவிர ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை வலுப்படுத்தும் நோக்கில் ஒரு இடத்தில் சொந்தக் கட்டிடமும், 10 பரிவர்த்தனைக் கூடங்களும், 25 வணிகர் கடைகளும், 20 கிட்டங்கிகளும், 9 அக்மார்க் ஆய்வகங்களுக்கு சொந்தக் கட்டிடங்களும், சந்தை விலை தொழில்நுட்பம் மற்றும் அறுவடைப் பின்செய் நேர்த்தி ஆகியவற்றை விவசாயிகள் அறிந்துகொள்ளும் வகையில் 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தொடுதிரை கணினி வசதி மற்றும் 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உணவகங்கள் ஆகியவை பல்வேறு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட உள்ளன.

## 3.19. உழவர் கையேடு

இத்துறையின் முக்கிய தகவல்களான விற்பனை, சேமிப்பு, தரக்குறியீடுகள், மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள், அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்பங்கள், சந்தை நுண்ணறிவு, செயல்பட்டு வரும் பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் விவரம் மற்றும் குளிர்ப்பதன வசதிகள் விவரம் ஆகியவற்றை உள்ளடக்கிய ‘உழவர் கையேடு’ தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.